23.07.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.35/2025</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அபிபுன்னிஷா | | |
| த/பெ | அப்துல் கரீம் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | வீட்டு குடித்தனம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 58/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## <u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையில் உள்ளவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் 30 வருடமாக ஜானகிபுரத்தில் அந்த இடத்தில் வசித்து வருகிறேன். எனக்கும், வீரப்பன் என்பவர் சுமார் 4 வருடமாக பக்கத்தில் வீடு கட்டிக் கொண்டு வந்து தகராறு செய்து கொண்டு தினமும் அசிங்கமாக பேசிக்கொண்டு, மிரட்டி கொண்டு, இருந்தார். இது சம்பந்தமாக எனது அக்கா பிள்ளை கமாலுதீன் என்பவரிடம் சொன்னேன். அவர் ஊர் பெரியவர்களிடம் சொல்லி பஞ்சாயத்து செய்தார். நாங்கள் கடந்த 04-08-2024 இரவு சுமார் 7.30 மணி அளவில் ஒரு விசேஷத்திற்கு சென்று விட்டு வந்து ஜானகிபுரம் அங்காளம்மன்

கோயில் அருகில் பேருந்தை விட்டு இறங்கினோம். நாங்கள் வண்டியை விட்டு இறங்கியபோது, என் அக்கா மகன்கள் கமாலுதீன், சதாம் உசேன் ஆகியோர்கள் நின்றிருந்தார்கள். ஏற்கனவே பஞ்சாயத்து செய்ததை மனதில் வைத்துக்கொண்டு, நீங்கள் என்ன அவர்களுக்கு சப்போர்ட்டா என்று சொல்லிக் கொண்டு ஒரு பெரிய இரும்பு பைப்பை கொண்டு வீரப்பன் என் அக்கா மகன் கமாலுதீனை அடித்தார். அதை அவர் தடுத்தார். பைப் கீழே விழுந்துவிட்டது. அந்த பைப்பை சரவணன் எடுத்து சதாம் உசேனை அடித்தார். பின்பு அவர்கள் கத்தியை எடுத்து எனது அக்கா மகன்களை குத்த வந்தார்கள். அதைப் பார்த்து இன்னொரு அக்கா மகன் அய்யய்யோ அவர்களை குத்த வருகிறார்களே என்று சத்தம் போட அனைவரும் ஒன்றாக கூடி விட்டார்கள். அதன் பிறகு அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்தம் கேட்டு அனைவரும் ஓடிவந்த பிறகு தான் இந்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் பேருந்தில் இருந்து இறங்கினோம். நான் சுமார் 100 மீட்டர் தொலைவில் நின்று இருந்திருப்பேனா என்றால், இருக்கலாம். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். அந்த இருட்டில் யார் அடித்தார்கள் என்பது அடையாளம் தெரியாது என்றால், வீரப்பனும், சரவணனும் அடித்தார்கள் என்பதை நான் பார்த்தேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சுமார் அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை இருந்திருப்பேன். அப்போது என் அக்கா மகன் கமாலுதீன் அங்குதான் இருந்தார். அந்த இடத்தில் சுமார் எத்தனை பேர் இருந்திருப்பார்கள் என்றால், அனைத்து பொதுமக்களும் அங்குதான் இருந்தார்கள். நிறைய பொதுமக்கள் இருந்தார்கள். எனக்கும் ஆஜர் எதிரி வீரப்பன் என்பவருக்கும் வீட்டுமனை தொடர்பாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அவர் அடிக்கடி வீட்டுமனை சம்பந்தமாக பிரச்சனை அளிப்பது தொடர்பாக நாங்கள் காவல் நிலையத்தில்

ஏற்கனவே புகார் கொடுத்துள்ளோமா? என்றால், புகார் கொடுத்துள்ளோம். இந்த புகார் கொடுத்த விவரத்தை நான் காவல்துறையினர் என்னை விசாரணை செய்தபோது சொன்னேனா? என்றால் சொன்னேன். இந்த சண்டை குறித்து நான் காவல் நிலையம் செல்லவில்லை. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை. வீட்டுமனை பிரச்சனை தொடர்பாக நாங்கள் காவல்துறையில் பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றும், அதுபோன்ற சம்பவமே நடக்கவில்லை என்றும், எனது உறவினர்கள் யாரும் தாக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் 30 வருடமாக அங்கே இருக்கிறோம். ராஜமாணிக்கம் என்பவரை எனக்கு தெரியும். வீரப்பன் என்பவரின் தாத்தா பெயர் ராஜமாணிக்கம். அவர்களிடமிருந்து நாங்கள் இடம் வாங்கவில்லை. ராஜமாணிக்கத்திற்கு எனது வீட்டிற்கு அருகில் இடம் உள்ளது என்றால், அவருக்கு அங்கு இடமில்லை. என்னை காவல்துறையினர் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்யவில்லை. நான் நடக்காத சம்பவத்திற்காக எனது அக்கா மகன்களுக்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**